# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3




தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

( பன்னாட்டுக் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு )

ISBN: 978-93-87865-06-8

தொகுதி - 3

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்**, தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

| | | | |
|---|---|---|---|
| 35. | முனைவர் தமிழ்செல்வி. ப. | இயேசுகாவியம்-மலைப்பொழிவில் மனித மதிப்பீடுகள் | 125 |
| 36. | செல்வி தாட்சாயனி, ம. | இயேசுகாவியம் காட்டும் இறைமகனின் அன்பு | 129 |
| 37. | முனைவர். நிர்மலா செல்வி, வே. | இயேசுகாவியம் சுட்டும் அன்பு | 132 |
| 38. | முனைவர் பாப்பா, மா. | இயேசு காவியத்தில் மனித மாண்புகள் | 136 |
| 39. | முனைவர் சகோ. மங்கள சுந்தரி, க. | எஸ்தர் காவியத்தில் மானுட மதிப்பீடுகள் | 139 |
| 40. | முனைவர் ரில்பர்ட் ஜெனார்த்தனன், வ. | இயேசு காவியத்தில் உவமைகள் ஏற்படுத்தும் கருத்தியல் | 142 |
| 41. | முனைவர் ரேணுகா, நா. | இறவாக் காவியத்தில் மனித மாண்புகள் | 145 |
| 42. | திருமதி ரேவதி, க. | உலகிற்கு வழிகாட்டும் உவமைகள் | 149 |
| 43. | முனைவர் லதா, தா. | அன்னைதெரசா நிகழ்வுகளில் மனிதம் | 152 |
| 44. | செல்வி லட்சுமி பிரியா, லோ. ரா. | சிலுவையின் பாடுகள் வழி "மனிதம்" | 155 |
| 45. | திருமதி ஜான்சி, பா. | கண்ணதாசனின் இயேசுகாவியத்தில் வாழ்வியல் நெறிகள் | 159 |
| 46. | ஜெயசாந்தி, ஜெ. | இயேசு காவியத்தில் மனித மதிப்புகள் | 163 |
| 47. | ஜெயபூர்ணிமா, வே. | சர்வசமய சமரசக் கீரத்தனையில் முக்தி | 167 |
| | | **பிற** | |
| 48. | முனைவர் பணி. அன்பரசு, ம., சே.ச. | இஸ்லாமிய கிறித்தவச் சமயங்கள் முன்வைக்கும் அறச்சினம் குறித்த பார்வைகள் | 171 |
| 49. | திரு ஆனந்த், பி. | கிறித்தவ வழிபாட்டுப் பாடல்களில் அன்பு | 174 |
| 50. | முனைவர் அருள்தந்தை இருதயராஜ், சே.ச. | ஸ்டெர்லைட் போராட்டத்தில் மனித உரிமை மீறல்கள்; நம்வாழ்வு இதழின் பதிவுகளும் பார்வைகளும் | 177 |
| 51. | திரு. காளிஸ்பிரபு, க. | தமிழ் இலக்கண மரபில் தொன்னூல் விளக்கம் | 182 |
| 52. | திருமதி சத்தியப்பிரியா, பொ. | கிறித்துவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 185 |
| 53. | திரு. பால்ராஜ், பி. | கிறித்தவம் வெளிப்படுத்தும் அன்புநெறி | 188 |
| 54. | முனைவர் பூங்கொடி, சு.ர. | வில்லுப்பாட்டில் பெண்களின் மதிப்பீடுகள் | 191 |
| 55. | முனைவர் மோட்ச ஆனந்தன், ம. | கிறித்துவச் சிந்தனையில் அயோத்திதாசப் பண்டிதரும் தந்தை பெரியாரும். | 194 |
| 56. | Dr. V. Suganya | MARIAN VIRTUES IN CONTEMPORARY WORLD | 196 |

# உலகிற்கு வழிகாட்டும் உவமைகள்

திருமதி க. ரேவதி
உதவிப்பேராசிரியர்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை -18

**முன்னுரை**

மண்ணுலகில் மனிதர்களோடு வாழ்ந்து, மனிதர்களுக்கு வழிகாட்டி, ஒளியூட்டி, நெறிப்படுத்திய சமயங்களுள் கிறித்தவமும் ஒன்று. உலகில் அதிக அளவு மொழி பெயர்க்கப்பட்ட பெருமையுடைய விவிலியத்தில் எண்ணற்ற உவமைகள் மலிந்துள்ளன. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உவமைகளை மதுரை வாய்ஸ்கிறிஸ்டோ அவர்கள் 'இயேசுவின் உவமைகள் கவிதையில் தேன் நெல்லி' எனும் நூலாக வெளியிட்டுள்ளார். அந்நூலில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் விழுமியங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நுழை வாயில்**

வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் விவிலியத்தில் உள்ளன என்றால் அது மிகையாகாது. இறைஇயேசு உவமைகளோடு அனைத்தையும் விவரித்தார். வாய்ஸ்கிறிஸ்டோ அவர்கள் விவிலியத்தைத் தேனாகவும் உவமைகளை நெல்லிக்கனியாகவும் உருவகப் படுத்தியுள்ளார். லூக்கா நற்செய்தி மற்றும் மத்தேயு நற்செய்தியில் இடம்பெறும் பதினெட்டு உவமைகளைத் தேர்ந்தெடுத்து அவ்வுவமை எதற்காகச் சொல்லப்பட்டது என்ற பின்னணியினையும் இன்றைய நம் சமூகத்தின் நிலைப்பாட்டையும் விளக்கி ஆன்மிக நூலாக எழுதியுள்ளார். இப்பதினெட்டுக் கருத்துக்களை உளத்தில் இருத்தினாலே உலகம் உன்னதமடையும்.

**விதை – விழுமியம்**

இறை வார்த்தைகள் வழியோரம், பாறைப்பகுதி, முட்செடிகள் மற்றும் நல்ல நிலங்களில் விதைக்கப்பட்டன. நல்ல நிலங்களில் விதைக்கப்பட்ட விதைகள் விருட்சமாயின. இந்த 'நல்ல விதை' உவமையை இன்றைய இயற்கைக்குப் புறம்பான மரபணு விதைகளுக்குப் பொருத்தி,

**"கருவறை இல்லாமலே**
**கடைவிரிக்கப்படும் விதைகளை**
**கையேந்திப்பெறும் அவலம்"**

கண்டு பொங்கி இறைவனின் வார்த்தைகளுக்குப் புறம்பாக இருந்தால் ஆன்ம சேதாரம் அரங்கேறும் என்கிறார். இறைச்சிந்தனை எனும் விதை, பாறையில் விழுந்து விசுவாச வேர்விட்டு விதைத்தாலும் சோதனை வெயிலில் தீய்ந்து போகும். எனவே மனித மனத்தில் இதயநிலத்தில் விழுந்த நல்வார்த்தையெனும் உரமிட்டு பலன் தரும் விதையாக வாசகனை பயணிக்க வைக்கிறார். 'நல்ல விதை' எனும் உவமையின் வாயிலாக மனிதர் இறைச்சிந்தனையை, இறைவசனங்களை இதயத்தில் தேக்கினால் சமூகம் மலரும் எனும் நற்சிந்தனையை விதைத்துள்ளார்.

**ஊதாரிப்பிள்ளை**

ஊதாரிப் பிள்ளை உவமையின்வழி, இறைச்சிந்தனை இதயத்தில் இல்லை எனில் இறந்தவனாவோம். 'காணாமற் போனாயோ' எனும் உவமை இன்றை இளைய தலைமுறையினருக்காக இறை மகனால் எழுதப்பட்டது. இளையமகன் தவறிழைத்து தந்தையிடம் இருந்து சொத்தினைப் பறித்து உல்லாசமாய் வாழ்கிறான். பணத்தோடு நண்பர்களும் போனபின் பன்றிகளோடு வாழ்ந்து மனம் திருந்தி கூலியாளாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறான். தந்தை தன் மகன், உயிர்பெற்று மீண்டதாக எண்ணி மகிழ்கிறார். விருந்து வைக்கின்றார். மூத்தவன் தந்தையிடம், "அடிமைபோல அனைத்தும் செய்தேன் நம் குலத்தை வீணாக்கியவனுக்கு விருந்தா? என்று ஆதங்கத்துடன் கேட்கிறான். அவனது கேள்வி நியாயமானது. தந்தை மூத்தவனிடம் இறந்தவன் உயிர்பெற்றதைப் போல, காணாமல் போனவன் மீண்டும் கிடைத்ததைப் போல வந்துள்ளான் என்று கூற மகிழ்கிறான். கவிதையின் இறுதியில் காணாமல் போன மகனாக யார் இருந்தாலும் இறைவனைச் சரண் புகுந்தால் மீட்சி பெறலாம் என்கிறார். இன்றைய சூழலில்